




# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 12 | **MAALAI EXPRESS** | ஹிஜ்ரி 1446 ரபிஉல் ஆகிர் 25

*மாநிலம் பயனுற!*

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 29, 2024 ● வெளியூர்: 30-10-2024, புதன்கிழமை

RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 113 ● 8 பக்கம் ● ரூ.6


## முதல் முறையாக

# ரூ.59 ஆயிரத்தை தொட்ட தங்கம் விலை

## பொதுமக்கள் அதிர்ச்சி

சென்னை, அக். 29-

தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஒருநாள் உயர்வதும், மறுநாள் குறைவதுமாக ஒரு நிலையற்ற தன்மையிலேயே பயணித்து கொண்டிருக்கிறது. சென்னையில் நேற்று முன்தினம் கிராம் ரூ.7,360க்கும், ஒரு பவுன் ரூ.58,880க்கும் விற்பனை ஆனது.



தங்கம் விலை நேற்று குறைந்தது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.360 குறைந்து ரூ.58 ஆயிரத்து 520க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.45 குறைந்து ரூ.7,315க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.59 ஆயிரத்தை தொட்டது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 உயர்ந்து ரூ.7,375க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ரூ.108க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.


सत्यमेव जयते







## புதுவை அரசின் தேசிய நெடுஞ்சாலை துறையின் சாதனைகள்



- புதுச்சேரி, விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் எம் என் குப்பம் முதல் இந்திரா காந்தி சதுக்கம் வரையிலான சாலை பகுதியினை மேம்படுத்துதல் மற்றும் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உள்ள உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகள் ஆகியன ரூ.90 கோடி செலவில் முடிவடைந்துள்ளது.
- புதுச்சேரி நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்த்திட இந்திரா காந்தி சதுக்கம் மற்றும் ராஜீவ் காந்தி சதுக்கங்களை இணைத்து ஒரு இரண்டு அடுக்கு உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிக்காக ரூ. 600 கோடிக்கு மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.
- புதுச்சேரி - கடலூர் தேசிய நெடுஞ்சாலையை மரப்பாலம் முதல் முள்ளோடை வரை நான்கு வழிப்பாதையாக விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் பணி எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.
- புதுச்சேரி - விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை ரெட்டியார் பாளையம் பகுதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு நடேசன் நகர் முதல் அரும்பார்த்தபுரம் வரை புறவழிச்சாலை இணைப்புச்சாலை அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

**செயற்பொறியாளர்**
**தேசிய நெடுஞ்சாலை கோட்டம், பொதுப்பணித்துறை, புதுச்சேரி.**

No.2924/DIP/AD(PRESS)/PRA/2024-25 Dated: 07.10.2024

# தித்திக்கும் தீபாவளி சிறப்பு மலர்

நாள்: 29.10.2024

# அன்பு, அமைதி, ஒற்றுமையின் வெளிப்பாடே தீபாவளி

ஐப்பசி மாதம் அடைமழைக் காலம் என்பது பழமொழி. அத்துடன் ஐப்பசி ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் மாதமும் ஆகும். இம்மாதத்திற்கு துலா மாதம் என்ற பெயரும் உண்டு. இம்மாதத்தில் இந்தியாவின் முக்கிய பண்டிகையான தீபாவளி கொண்டாடப்படுகிறது.

கேதார கௌரி விரதம், முருகன் சுக்ரவார விரதம், தனத்திரயோதசி, யமதுவிதியை, கோவத்ச துவாதசி, பாபாங்குசா ஏகாதசி, இந்திர ஏகாதசி போன்ற நிகழ்வுகளும் ஐப்பசியில் நிகழ்கின்றன. இவற்றைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

தீபாவளி இந்தியா முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடக்கூடிய பண்டிகையாகும். இது ஆண்டுதோறும் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசியில் தென்இந்தியாவிலும், ஐப்பசி அமாவாசையில் வடஇந்தியாவிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இப்பண்டிகை இந்துக்கள், சமணர்கள், சீக்கியர்களால் மிகவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை வடஇந்தியாவில் லட்சுமி பூஜை என்றும், வங்காளத்தில் காளி பூஜை என்றும் வழங்கப்படுகிறது.

இப்பண்டிகையின் போது நல்லெண்ணெய் தேய்த்து வெந்நீரில் மக்கள் நீராடுகின்றனர். இதற்கு கங்கா ஸ்நானம் என்று பெயர். பின் புதிய ஆடைகள், பட்டாசுகள், இனிப்புக்கள், பட்சணங்கள் வைத்து வீட்டில் வழிபாடு நடத்துகின்றனர்.



புதிய ஆடைகளை அணிந்து கோவில்களில் வழிபாடு நடத்துகின்றனர். உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனிப்புகள், பட்டாசுகள், பரிசுப்பொருட்கள் வழங்கி மகிழ்கின்றனர்.

புதுமணத் தம்பதியர் தலைதீபாவளியை மணப்பெண்ணின் வீட்டில் கொண்டாடுகின்றனர். அன்பு, அமைதி, ஒற்றுமை ஆகியவற்றின் வெளிபாடாக தீபாவளி கொண்டாட்டம் அமைகிறது.

ஆங்கிலப்புத் தாண்டு, காதலர்தினம், நண்பர்கள்தினம் போன்ற இறக்குமதி விழாவை கொண்டாடும்போது நம் பாரம்பரிய பண்டிகையை மிகச்சிறப்புடன் கொண்டாடுவோம். தமிழர்கள் அளவுக்கு தீபாவளியை சிறப்புடன் கொண்டாடுபவர் யவரும் இலர். தீபாவளி இந்துக்கள் மட்டுமல்லாது சமண சீக்கிய மதத்தினரும் வேறு காரணங்களுக்காக கொண்டாடுகிறனர். தற்போது மாற்று சமயத்தினரும் தீபாவளியை முன்னிட்டு புத்தாடை எடுக்கின்றனர் பட்டாசு வெடிக்கின்றனர். நாமும் அவர்களுக்கு தீபாவளி பலகாரம் முதலில் கொடுத்து மகிழ்விக்க வேண்டும்.

வாழ்க வளமுடன்
**கலைவாணி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி**
பத்தமடை - மேலச்செவல்

அன்புடையீர்,
எங்கள் பள்ளியில் Pre KG முதல் 5ம் வகுப்பு வரை நடைபெறுகின்றன. தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளும் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களின் உடல், மன வளம் மேம்பட யோகா, சிலம்பம், கராத்தே ஆகிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. காற்றோட்டமான வகுப்பறைகள், விளையாட்டு மைதானம் ஆகியவை அமைக்கப்பட்டு மாணவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றன.
உங்கள் மாணவர்களை எங்கள் பள்ளியில் சேர்ந்து கற்றலில் மேம்படுத்துவீராக.

இவண், எஸ். ராஜேஸ்வரி, பள்ளி தாளாளர்




**GOVERNMENT OF PUDUCHERRY**
**PORT DEPARTMENT**

**Pondicherry port offers excellent facilities for EXPORT / IMPORT activities**

- Excellent port infrastructure available for handling bulk, bagged cargo and Container Cargo.
- Low handling cost and port tariff.
- Direct berth facility available for vessels up to 3.5 metres at New Port.
- A slipway to construct, launch and undertake repairs of vessels of 150 Tonnes is available.
- Good hinterland connectivity by road (ECR, NH 45A and NH 66).
- Pondicherry Port has commenced Cargo handling operations. Exporters / Importers may utilize this facility to their advantage.

For further details contact:
Director of Ports, Puducherry - 605 001. Phone. 0413-2337114 / 2338092
Email: port@py.gov.in Website: https://port.py.gov.in

No.2924/DIP/AD(Press)/PRA/2024-25


SCHOOL OF ALLIED HEALTH SCIENCES

Vinayaka Mission's Research Foundation - Deemed To Be University
(Declared Under Section 3 of the UGC Act, 1956) (Accredited by NAAC 'A' Grade)

Scan for Eligibility and Further Details

NO NEET REQUIRED

UG Courses / PG Courses*



- Anaesthesia Technology
- Renal Dialysis Technology
- Operation Theatre Technology
- Trauma Care Management
- Medical Lab Technology
- Radiology and Imaging Technology
- Respiratory Care Technology
- Physician Assistant - Cardiac Technology
- Perfusion Technology - Neuroscience Technology
- B.Optometry - Forensic Science Technology
- Master of Public Health with stipend*

21 YEARS OF Excellence in Education

Salient features
- National, International Certification along with Degree for better employment
- Startup/Entrepreneurship Training through IIC,MoE/E-Cell,TN Govt/GIEC
- Internship training at leading hospitals through MOU
- Hands on training through world class simulation labs
- Department specific conferences.CME's,Seminars through out their study period -Upskilling

| Salem | Puducherry | Chennai |
|---|---|---|
| VIMS Hospital Campus | Aarupadai Veedu Medical College & Hospital Campus | Aarupadai Veedu Institute of Technology Campus |

TOLL FREE : 18003093332




கிடைக்கும் இடங்கள்

அனைத்து பாண்லே பாலகங்கள்

குறிப்பு : புதுச்சேரி மற்றும் தமிழக பகுதிகளிலிருந்து பாண்லே பால் பொருட்கள் விற்பனை செய்ய விற்பனை முகவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட கைப்பேசி எண்களை தொடர்பு கொள்ளவும்.

மேலும் விபரங்களுக்கு

புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் P1

விற்பனை அலுவலகம் : எண் 71, மிஷன் வீதி, புதுச்சேரி - 605 001.

Ph : 99429 94137 / 88709 57870 / 0413 - 2221955

सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை

- ஆரோக்கியமான கால்நடைகள் மற்றும் கோழிகள் பால், இறைச்சி மற்றும் முட்டை அதிக உற்பத்திக்கு வழிவகுக்கும். கால்நடைகளின் ஆரோக்கியத்தை பராமரிப்பது இத்துறையின் முக்கிய பணியாகும். கால்நடைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த, கால்நடை சேவைகள் மற்றும் நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் வாங்குவதற்கு ரூ.1.75 கோடி செலவிடப்பட்டு, அதன் மூலம் 3.14 லட்சம் கால்நடைகள்/கோழிகள்/செல்லப்பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பல்வேறு நோய்களில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது. கால் மற்றும் கோமாரி நோய்க்கு எதிரான தடுப்பூசிகள் ஆறு மாத இடைவெளியில் 74,000 கால்நடைகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மொத்தம் 1.4 லட்சம் தடுப்பூசிகள்) அதேபோல், 8000 கிடேரிகளுக்கு புருசெல்லோசிஸ் தடுப்பூசி, 2 லட்சம் ஆடுகளுக்கு ஆடு அம்மை தடுப்பூசிகளும், 70,000 ஆடுகளுக்கு பிபிஆர் தடுப்பூசிகள், 4800 வெறி நோய் தடுப்பூசிகள் மற்றும் 12,000 கோழிகளுக்கு R2B தடுப்பூசிகளும் இந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டது. 2023-24 நிதியாண்டில் 64 கால்நடை நல சிகிச்சை முகாம்கள், கால்நடை மருந்தகம் மூலமாக நடத்தப்பட்டது.
- 2023-24 நிதியாண்டில், மாநிலத்தில் பால் உற்பத்தியை பெருக்க, 4149 கறவை பசுக்கள் 50% மானியத்தில் வழங்கப்பட்டது.
- கால்நடை வளர்ப்போர் மத்தியில் பெறும் வரவேற்பைப் பெற்ற இந்த துறையின் மிகவும் பிரபலமான திட்டம், 'கால்நடை விவசாயிகளுக்கு 75% மானியத்தில் கால்நடை தீவனம்/கன்று தீவனம் விநியோகம். இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியை பெருக்கிட விவசாயிகளுக்கு உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2023-24 நிதியாண்டில் 2830.4 மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு 4865 கால்நடைகளை உள்ளடக்கிய 3800 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. அதேபோல் 182.4 மெட்ரிக் டன் கன்றுக்குட்டி தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு, 760 விவசாயிகளுக்கு 760 கன்றுக்குட்டிகளுக்கு மொத்தம் ரூ. 6.32 கோடி செலவில் வழங்கப்பட்டது.
- கால்நடை வளர்ப்போருக்கு கூடுதல் வருவாயை வழங்குவதற்கான நடவடிக்கையாக, ஆட்டு இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க, 2044 எண்கள். 5+1 ஆடு 50% மானியத்தில் விநியோகிக்கப்பட்டது.
- மாநிலத்தில் முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க, 2023-24 நிதியாண்டில் 50% மானியத்தில் கொல்லைப்புறக் கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்காக 11,800 வான் கோழிகள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு விநியேகிக்கப்பட்டது மற்றம் 5,000 இரட்டை நோக்கம் கொண்ட கிரிராஜா கோழிகள் @ 50% மானியத்தில் விநியோகிக்கப்பட்டது.
- இந்திய அரசின் உதவியுடன், நவீன கருவிகள் பொருத்தப்பட்ட 4 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி தலா ரூ.16 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு (64 லட்சம்), கிராமப்புறங்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க இந்த வாகனம் பயன்படுத்தப்படுகிறது.
- 2023-24 ஆம் ஆண்டில், விவசாயிகள் மற்றும் செல்லப்பிராணிகளை வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் 34 'கால்நடை மற்றும் கோழி' கண்காட்சிகளையும் 2 'நாய் மற்றும் பூனை' கண்காட்சிகளும் நடைபெற்றுள்ளது.
- கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அண்டை மாநிலங்களில் விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு பரவும் நோய்கள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு மண்டலங்களிலும் கால்நடைகளைப் பாதுக்காக்க தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
- கடந்த நிதியாண்டில் கால்நடை விவசாயிகளுக்கு 5192 கிசான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டது.
- சுத்தமான பால் உற்பத்தியை அதிகரிக்க 292 பால் கறக்கும் இயந்திரங்கள் 100% மானியத்தில் ரூ.50 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.
- கால்நடை விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடிய கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்கள் தடுப்பது குறித்து, விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளது.

## இத்துறையின் திட்டங்களின் சிறப்பம்சங்கள் (2024-25)

- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாநிலத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க, 500 பசு கிடேரிகளுக்கு அதிக உற்பத்தி தரக்கூடிய பாலினம் பிரிக்கப்பட்ட IVF (Invitro fertilzed) 100% மானியத்தில் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 21,000/- விலை உள்ள கரு விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும். முதல் நிகழ்வாக, 250 எண். விலங்குகள் அடையாளம் காணப்பட்டு 60 பசுக்களுக்கு IVF செய்யப்பட்டது.
- கொழுப்பு நிறைந்த பால் உற்பத்தி அதிகரிக்க கால்நடை வளர்ப்பவர்களுக்கு 100% மானியத்தில் ஹைட்ரோபோனிக்ஸ் (மண் இல்லா புல் வளம் ) 100 யூனிட் வழங்கப்படவுள்ளது.
- கூட்டுறவு பால் சங்கத்தில் உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு 75% மானியத்தில் கால்நடை தீவனம்/ கன்று தீவனம் விநியோகம்.
- பால் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு 50% மானியத்தில் ஒற்றை கறவை வழங்கப்படவுள்ளது.
- புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ் முட்டை / இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க 50% மானியத்தில் 6 வார வயதுடைய வான்கோழி வழங்கப்படவுள்ளது.
- 18 வார வயதுடைய முட்டையிடும் பெட்டை கோழி 1500 நபர்களுக்கு 75% மானியத்தில் ரூ.3.50 கோடி செலவில் வழங்கப்படவுள்ளது. (ஒரு நபருக்கு 20 கோழி, கூண்டு மற்றும் தீவனம்)
- குச்சி தீவனம் தயாரிக்கும் இயந்திரம் -100% மானியத்தில் 120 விவசாயிகளுக்கு பெல்லட் தயாரிக்கும் இயந்திரம் ரூ.72 லட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது.

No.2924/DIP/AD(Press)/PRA/2024-25

இயக்குநர்

# புதுவை மக்களுக்கு சிறப்பான சேவை செய்து வரும் பாண்லே




புதுச்சேரி, அக். 29-

புதுவையில் பாண்லே நிறுவனமானது புதுச்சேரியில் தொடங்கப்பட்ட முதல் கூட்டுறவு சங்கம் ஆகும். இது தன்னுள்ளே 101 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் சங்கங்களை அங்கத்தினர்களாக கொண்டுள்ளது. பாண்லே நிறுவனம் மக்களுக்கு 68 ஆண்டு களுக்கும் மேலாக தரமும் சுவையும் உடைய பாலினை குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்தியாவிலேயே பால் உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கு அதிக கொள்முதல் விலை வழங்கும் மற்றும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பால் விற் பனை செய்யும் நிறுவனம் பாணிலே என்பது குறிப் பிடத்தக்கது. பால் மட்டு மின்றி ஏராளமான மதிப்புக் கூட்டப்பட்ட மற்றும் சுவை மிகுந்த பால் பொருட்களான குல்பி, பால்கோவா, நெய், தயிர், மோர், லெஸ்ஸி, நறுமணப் பால், ஐஸ்கிரீம் பொருட் களும் பாண்லே நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு தினந் தோறும் வாடிக்கை யாளர்களுக்கு பார்லர் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகளுக்கு சிறப்பு ஆர்டரின் பெயரில் தள்ளுபடி விலை யிலும் விற்பனை செய்யப்படுகிறது. புதுவை மாநிலத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை பார்லேவின் சுவைமிகு பால் பொருட்கள் பெரிதும் கவர்ந் துள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கதாகும். பாண்லே நிறுவனம் புதுச்சேரி மாநிலத்தின் கூட்டுறவின் முகமாக திகழ்வதுடன் பல்வேறு சவால்களையும் சந்தித்து வருகிறது. போதுமான அளவு பால் உற்பத்தி புதுச்சேரியில் இல்லாத நிலையிலும் புதுவை மக்களுக்கு சிறப்பான சேவையினை தொடர்ந்து வழங்கி வருகிறது. மேலும் அரசு திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த மேம்பாட்டு பணிகள் மூலமாக பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையினை தங்குதடையின்றி செய்து வருகிறது.

கூட்டுறவு சித்தாந்தம் மேம்படவும் பாண்லே நிறுவனம் தொடர்ந்து பால் உற்பத்தியாளர் களுக்கும். பொதுமக்களுக் கும் நற்பணியாற்றிட வாடிக்கையாளர் களின் பேராதரவு இன்றியமை யாததாகிறது. எனவே வாடிக்கை யாளர்கள் தொடர்ந்து பாணலே பால் பொருட்களை அதிக அளவில் வாங்கி பயன் பெற்று கூட்டுறவு நிறுவன மான பாணலே நிறுவனம் தனது வளர்ச்சி பாதையில் ஒரு புதிய மைல் கல்லினை எட்டிட தங்களது பேராதரவினை தொடர்ந்து நல்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.











# தமிழகம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

சென்னை, அக்.29

ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டு வருகிறது. அதற்கு முன்பதாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவது வழக்கம். அந்த வகையில், வரும் ஜனவரி 1ந்தேதியை, புதிய வாக்காளராக தகுதி ஏற்படுத்தும் நாளாக (18 வயது பூர்த்திக்கான நாளாக) வைத்து புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட உள்ளது. அதற்கு முன்பு பழைய வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டும்.

இந்த திருத்தப்பணிகளை மேற் கொள்வதற்கு வசதியாக இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

தமிழகம் முழுவதும் 2025ம் ஆண்டுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப் பட்டது. தமிழகத்தில் புதிய வரைவு வாக்காளர்கள் பட்டியலை அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் வெளியிட்டுள்ளனர்.

அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் குமரகுருபரன் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்.







புதுச்சேரி அரசு

# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை

**நலத்திட்ட கையேடு**

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களைப் பற்றிய முறையான விழிப்புணர்வு பயனாளிகளுக்கு சென்றடையாததால், விண்ணப்பங்களை காலம் தாழ்த்தியும், சரிவரப் பூர்த்தி செய்யாமலும், போதுமான சான்றிதழ்களை இணைக்காமலும் சமர்ப்பிக்கின்றனர். இதனால், பயனாளிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவி உரிய நேரத்தில் கிடைப்பதில்லை.

எனவே, இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான பொது விதிமுறைகளை திட்டம்/பிரிவு வாரியாக தொகுத்து வழங்கியுள்ளோம்.

**நலத்திட்டங்கள்**

**பெண்கள் பிரிவு**

கீழ்குறிப்பிட்ட அனைத்து திட்டங்களுக்கும் விண்ணப்பம் செய்ய ஆண்டு வருமானம் ₹75,000/– க்கு மிகாமல் இருக்க வேண்டும். புதுச்சேரி மாநிலத்தில் 5 வருடத்திற்குக் குறையாமல் வசிப்பவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே விண்ணப்ப படிவம் பரிசீலிக்கப்படும்.

1. வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை மணப்பெண்ணின் திருமணத்திற்கான நிதியுதவி:
1.4.2015 முதல் ரூ. 25,000/– வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே பயன்பெற முடியும்.
★ திருமணத்திற்கு 30 நாட்களுக்கு முன் திருமணத்திற்கு பின் 30 நாட்களுக்குள் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, வட்டாட்சியர் சான்றிதழுடன் விண்ணப்பத்தை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
★ அரசு பதிவாளர் (Registrar) அலுவலகத்தில் வழங்கப்பட்ட திருமண பதிவுச் சான்றிதழை அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.
★ விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பிறகு இறந்துவிட்டால் அவரின் இறந்த பதிவுடன் வாரிசுதாரர் அலுவலகத்தை அணுகவும்.
★ பெற்றோர் இருவரும் இறந்து போயிருப்பின், அவர்களின் இறந்த பதிவு மற்றும் உறுதிமொழிப் பத்திரத்துடன் மணமகளே விண்ணப்பிக்கலாம்.

2. ஆதரவற்ற விதவைப் பெண்ணின் மகள் திருமணத்திற்கான நிதியுதவி:
★ 08.12.2022 முதல் ₹30,000 வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே பயன்பெற முடியும்.
★ வட்டாட்சியர் சான்றிதழுடன் திருமணத்திற்கு 30 நாட்களுக்கு முன் / திருமணத்திற்கு பின் 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
★ கணவரின் இறந்த பதிவு சமர்ப்பிக்க வேண்டும்.
★ பெற்றோரின் இறந்த பதிவு, உறுதிமொழிச் சான்றிதழ் மற்றும் விடுதலைச் சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பித்து மகள் நிதியுதவி பெறலாம்.

3. ஒரு பெண்/இரண்டு பெண் குழந்தைகளுக்கான உதவித்தொகை:
★ 14.9.2015 முதல் ₹ 30,000 (₹15,000/–, ₹15,000/–) சேமிப்பு வைப்பு நிதி பத்திரமாக வழங்கப்படுகிறது.
★ விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரரின் திருமணப்பதிவு சான்றிதழ் (அரசு), ஒரு பெண் / இரண்டு பெண் குழந்தைகளின் பிறப்பு மற்றும் பெற்றோர்களின் பிறப்பு சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
★ குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டதற்கான மருத்துவ சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.
★ 18 வயது பூர்த்தியடையாத பெண் குழந்தைகளின் பெற்றோர் எந்த வயதிலும் விண்ணப்பிக்கலாம்.
★ 18 வயது பூர்த்தியானவுடன் அலுவலகத்தை அணுகி சேமிப்பு வைப்பு நிதி பத்திரத்தை (அசல்) பெற்றுக்கொள்ளலாம்.

4. ஒரு பெண் குழந்தைக்கான நிதியுதவி
★ சேமிப்பு பத்திரம் ₹25,000/– வைப்பு நிதியாக வழங்கப்படுகிறது.
★ விண்ணப்பிக்கும் போது பெண்குழந்தை 8/ 9 / 10 வகுப்புகள் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.
★ பெற்றோரின் பிறந்த பதிவு. திருமணப்பதிவு சான்றிதழ், குழந்தையின் பிறப்பு மற்றும் கல்விச்சான்றிதழ் இணைக்க வேண்டும்.

5. விதவை மறுமணத்திற்கான நிதியுதவித் திட்டம்:
★ 1.4.2014 முதல் 50,000 வழங்கப்படுகின்றது.
★ 18–35 வயது வரையுள்ள விதவை பெண்கள் விண்ணப்பிக்கலாம். குழந்தைகள் இருப்பின், 18 வயதுக்கு மிகாமலும், வருவாய் ஈட்டுபவராகவும் இருக்கக்கூடாது.

6. பணி புரியும் மகளிர் மற்றும் மாணவிகளுக்கான தங்கும் விடுதி
★ பணி செய்யும் மகளிர் மற்றும் மாணவிகள் குறைந்த கட்டணத்தில் தங்கும் விடுதி
★ வருமான வரம்பு இல்லை

7. முதலமைச்சரின் பெண்குழந்தைகளுக்கான பொருளாதார ஆதரவு மற்றும் அதிகாரமளித்தல் திட்டம் 2023
★ 17/03/2023 க்கு அன்று / அதற்கு பிறகு பிறக்கும் அனைத்து பெண் குழந்தைகளுக்கும் ரூ. 50,000/– செல்வ மகள் சேமிப்பு திட்டத்தின் (சுகன்யா சம்ரிதி யோஜனா) கீழ் வைப்பு நிதியாக வங்கியில் செலுத்தப்படும்.
★ 18 வயது பூர்த்தியானவுடன் வைப்பு நிதி மற்றும் முதிர்வு தொகையை ரொக்கமாக பெற்றுக்கொள்ளலாம்.
★ வைப்புநிதி மற்றும் முதிர்வு தொகை பெற்றோருக்கோ/காப்பாளருக்கோ வழங்கப்படாது.
★ குழந்தை பிறந்த மருத்துவமனையிலிருந்து நேரிடையாக தகவல் பெறப்பட்டு புதுச்சேரி மாநிலத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு மட்டும் நிதி உதவி வழங்கப்படும்.
★ இத்திட்டத்திற்கு மட்டும் வருமான வரம்பு இல்லை.
★ ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகளும் பயனடையலாம்.
★ அரசு ஊழியர்களின் பெண் குழந்தைகளும் பயனடையலாம்.

**சமூக பாதுகாப்பு பிரிவு**

1. சமூக பாதுகாப்பு பிரிவின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (Old age pension)
★ முதியோர் ஓய்வூதிய திட்டம்
55–59 வயது வரை ₹ 2,000/–
60–79 வயது வரை ₹ 2,500/–
80 வயது முதல் ₹ 3,500/–
★ விண்ணப்பதாரர் 55 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும்.
★ விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ் (அசல்), ஆதார் அட்டை, உணவு பங்கீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
★ வட்டாட்சியரிடமிருந்து வருமானம் மற்றும் இருப்பிடச்சான்றிதழ் இணைக்க வேண்டும்.

2. விதவைப் பெண்கள் ஓய்வூதிய திட்டம்:
★ ₹ 2,000/– மாதாந்திர நிதியாக வழங்கப்படுகிறது.
★ விதவை எனில், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் கணவரின் இறப்புச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.
★ விண்ணப்பதாரர் 18 வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

3. முதிர் கன்னிகள் உதவித்தொகை திட்டம்:
★ 40 வயதுக்கு மேல் திருமணமாகாமல் உள்ளவர்களுக்கு மட்டும் ₹ 2,000/– மாதாந்திர உதவித்தொகையாக வழங்கப்படும்.
★ முதிர்கன்னி எனில், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் திருமணம் ஆகவில்லை என நோட்டரி சான்றிதழ் விண்ணப்பத்தில் பெற வேண்டும்.

4. கணவரால் கைவிடப்பட்டவர்:
★ ரூ.2000/– மாதாந்திர உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.
★ 7 ஆண்டுகளுக்கு மேல் கணவரைப் பிரிந்து வாழ்வதற்கான வட்டாட்சியர் சான்றிதழ்.
★ 18 வயதுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். விண்ணப்ப படிவத்தில் (நோட்டரி) பெற வேண்டும்.

5. திருநங்கைகள் உதவித்தொகை:
★ 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ₹ 2,000/– மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.
★ அரசு மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட திருநங்கைக்கான சான்றிதழ் இணைக்க வேண்டும்.

6. ஈமச்சடங்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்:
★ ஓய்வூதியம் வாங்குபவர் இறந்தால் ₹ 15,000/– அவரின் வாரிசுக்கு வழங்கப்படும்.
★ ஓய்வூதிய புத்தகம் மற்றும் இறப்பு சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

7. காச நோய் மற்றும் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு மாதந்தோறும் தலா ₹ 500/– வழங்கும் திட்டம்.

8. HIV மற்றும் AIDS - நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி உதவிதிட்டம்
★ ₹ 2000 முதல் வயதுக்கேற்ப மாதாந்திர தொகை மாறுபடும்.

9. வறுமை கோட்டிற்கு கீழ்வாழும் 21–55 வயதிற்குட்பட்ட குடும்ப தலைவிகளுக்கான நிதி உதவி திட்டம்
★ இத்திட்டத்தின் மூலம் 21 வயதுக்குமேல் 55 வயதிற்குள் இருக்கும் அரசின் எவ்விதமான மாதாந்திர உதவிதொகையும் பெறாத வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத் தலைவிக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கப்படுகிறது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்**

★ அங்கனவாடி மையங்கள் மூலம் துணை ஊட்டச்சத்து நோய்த்தடுப்பு சுகாதார பரிசோதனை பரிந்துரை சேவைகள் & ஊட்டச்சத்து, சுகாதாரக் கல்வி மற்றும் ஆரம்பக் குழந்தைப் பராமரிப்புக் கல்வி போன்ற ஆறு சேவைகள் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின் முதன்மைத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

1. போஷன் அபியான்
★ குழந்தைகள் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்களின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சி அளவைக் கண்காணிக்கவும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத இந்தியா என்ற இலக்கை அடையவும் இந்தத் திட்டம் மார்ச் 1 2018 முதல் செயல்படுத்தப்படுகிறது

2. தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்:
★ இது ஒரு மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும் இத்திட்டத்தில் வேலைக்கு செல்லும் பெண்களின் பணி நேரத்தில் அவர்களது குழந்தைகளை பாதுகாக்க காப்பகங்கள் நடத்தப்படுகின்றது இக்காப்பகங்களை அரசு சாரா அமைப்பு எனப்படும் NGO-க்கள் நடத்துகிறார்கள் அதற்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறது (90%) அரசு சாரா அமைப்புகள் மீதமுள்ள 10% நிதியுதவி ஏற்கிறது

3. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பிரிவு:
★ கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் 0–6 வயது குழந்தைகளுக்கு இணை உணவு (ஊட்டச்சத்து) வழங்கும் திட்டம். மாநிலம் முழுவதம் உள்ள 855 அங்கன் வாடி மையம் வழியாக செயல்படுத்தப்படுகிறது.

**புதுச்சேரி யூனியன் பிரதேச குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**

1. குழந்தைகள் நலன் காப்பு நிறுவனத்திற்கான நிதி உதவி :
★ அனாதைக் குழந்தைகள், கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் நிறுவனத்திற்கு ரூ. 3000/– மாதந்தோறும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படுகிறது.

2. குழந்தை தத்தெடுப்பு திட்டம்:
★ குழந்தை இல்லாத / குழந்தை வளர்க்க ஆர்வமுள்ள பெற்றோர்கள் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை தத்தெடுப்பு மையங்களை அணுகி விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
இமாகுலேட் ஜாய் ஹோம் (Immaculate Joy Home) கோலாஸ் நகர், உப்பளம், புதுச்சேரி போன் : 0413–2358971
★ குளுனி குழந்தைகள் இல்லம் (Cluny Children Home) ரோமண்ட் ரோலண்ட் வீதி, புதுச்சேரி. போன்: 0413–2334813
★ லிட்டில் ஏஞ்சல்ஸ், (Little Angels) மாதாகோயில் வீதி, கீலையூர், டி.ஆர் பட்டிணம், காரைக்கால். 04368 234437

3. குழந்தைகள் வாழ்வாதார திட்டம் :
★ குழந்தைகள் வாழ்வாதார திட்டத்தின் (Sponsorship) மூலம் மாதந்தோறும் தலா ரூ. 4000/– வழங்கப்படுகிறது.
★ (Foster Care) திட்டத்தின் மூலம் மாதம் ரூ.4000/– குழந்தைகளின் வளர்ப்பு பெற்றோருக்கு வழங்கப்படுகிறது.
★ After care திட்டத்தின் மூலம் மாதம் ரூ.4000/– 18–23 வயதுடை ஆண்/ பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

**மத்திய அரசு பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

1. ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)
★ குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகபட்சமாக 5 நாட்கள் இலவசமாக தங்கும் வசதி.
★ வருமான வரம்பு இல்லை.
★ தேவைக்கேற்ப மருத்துவ வசதி, சட்ட உதவி, காவல் உதவி, மன நல ஆலோசனை வழங்கப்படுகிறது

2. மகளை காப்போம், மகளுக்கு கற்பிப்போம் திட்டம் (BBBP):
★ குறைந்து வரும் குழந்தைகள் பாலின விகிதாசாரத்தை உயர்த்துதல்
★ பாலின பாகுபாட்டை தடுத்தல்
★ நிறுவனம் சார்ந்த குழந்தை பிறப்பை ஊக்குவித்தல்
★ குழந்தைகள் கல்வியில் இடைநிற்றலை கண்காணித்தல் ஆகிய முக்கிய நோக்கங்களை கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

3. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிரத்யேக உதவி எண்:
★ பெண்களின் அனைத்துவிதமான அவசரத் தேவைக்கு 112–ஐ தொடர்பு கொள்ளலாம்.
★ குழந்தைகளின் அனைத்துவிதமான அவசரத் தேவைக்கு 1098–ஐ தொடர்பு கொள்ளலாம்.

4. பாரத பிரதமர் மாத்ரு வந்தனா யோஜனா
★ உதவித்தொகையாக ரூ. 5,000/– முதல் குழந்தைக்கு மட்டும் வழங்கப்படும்.
★ இரண்டாவது பெண் குழந்தையாக இருப்பின் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.
★ கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்கும் / உயர்த்தும் நோக்கில் ரூ. 5,000 (ரூ.3000 + ரூ.2000) 2 தவணையாக வழங்கப்படும்.

5. மனித கடத்தல் மற்றும் வன்முறைக்கு உள்ளான பெண்கள் பாதுகாப்பு தங்கும் இல்லம்:
★ 18 வயதிற்க்குமேல், மன உளைச்சல், வன்முறை, மற்றும் தாக்குதலுக்கு உள்ளான பெண்கள் இலவசமாக தங்கும் வசதி.
★ மனநல ஆலோசனை, தொழிற்கல்வி, படிப்பு தொடர்தல் ஆகிய வசதிகள் வழங்கப்படும்.
★ பயனாளிகள் பெயரில் மாதம் ரூ. 500/– வைப்பு நிதியாக பயனாளியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

6. பெண்ணின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஒருங்கிணைந்த வழிகாட்டி மையம் (HUB) :
★ இத்துறை மற்றும் பல்வேறு அரசு துறைகளில் செயல்படுத்தப்படும் மகளிர் சார்ந்த அனைத்து திட்டங்களின் விவரம் அதற்கான வழிகாட்டுதலும் வழங்கப்படும்.

7. நாரி சக்தி மற்றும் பால் புரஸ்கார் தேசிய விருது திட்டம்
★ விளையாட்டு, சமூக சேவை, அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல். கலை மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் தனித்து /தன்னலமற்ற சேவை /செயல்பாடுகளை அங்கீகரிக்கும் வண்ணமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வருடம் தோறும் இவ்விருது மத்திய அரசால் வழங்கப்படுகிறது.
★ இவ்விருதிற்கான விண்ணப்பம் அந்தந்த வருடத்தில் ஆகஸ்ட் மாதம் 31–ந் தேதி வரை ஆன்லைனில் மட்டும் பெறப்படும்.

திட்டங்கள் குறித்த விரிவான விவரங்களுக்கு அந்தந்த பிரிவு நல அதிகாரி /அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

**இயக்குநர்**
**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை**
புதுசாரம் (எல்.ஐ.சி வளாகம் அருகில்) காமராஜர் சாலை, புதுச்சேரி
தொலைபேசி : 0413–2244964, 2242621, 0413–2244964 (FAX)

No.2924/DIP/AD(Press)/PRA/2024-25

# தோட்டக்கலை பயிர்களுக்கு உற்பத்தி மானியம் முதலமைச்சர் ரங்கசாமி வழங்கல்



புதுச்சேரி, அக். 29-

தோட்டக்கலை பயிர்களுக்கு உற்பத்தி மானியம் வழங்குவதை முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்.

புதுவை அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை கூடுதல் வேளாண் இயக்குனர் அலுவலகம் (தோட்டக்கலை) மூலமாக செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் வருடாந்திர செயல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு புதிய தோட்டங்கள் நிறுவுவதற்கும், பராமரிப்பதற்கும் மலர் சாகுபடி, கலப்பின காய்கறிகள், பழப் பயிர்கள், வாசனை பயிர்கள் மற்றும் மூடாக்கு அமைத்தல் சாகுபடி போன்ற பல்வேறு அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு உற்பத்திக்கு பிந்தைய மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முதலமைச்சர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண்துறை அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி கலந்துகொண்டு மானியத்தொகைகள் வழங்குவதை தொடங்கி வைத்தார். இதன்படி 103.17 எக்டேர் பரப்பளவில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்த 439 தோட்டக்கலை விவசாயிகளுக்கு ரூ.15 லட்சத்து 49 ஆயிரம் அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம், அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார், வேளாண் துறை செயலாளர் ராஜூ, இயக்குனர் வசந்தகுமார், துணை இயக்குனர் சண்முகவேலு உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# பாபநாசம் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறப்பு



நெல்லை, அக். 29-

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் நீர்த்தேக்கத் திலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அப்பாவு, மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் தலை மையில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளையங் கோட்டை சட்டமன்ற உறுப் னர் அப்துல்வஹாப், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை டீன், உதவி பேராசிரியருக்கு விருது



புதுச்சேரி, அக். 29-

விநாயகா மிஷனின் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை மற்றும் டீன் மற்றும் உதவி பேராசிரியருக்கு அமெரிக்காவிலுள்ள பல்கலை கழகத்தின் மூலம் விருது வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வர்ஜீனியாவில் அமைந்துள்ள லிஞ்ச்பர்க் பல்கலைக்கழகமானது தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகமாகும். இது சமீபத்தில் கல்வியில்சிறந்து விளங்கும் கல்வி நிறுவினங்களை, குறிப்பாக மருந்துவ உதவியாளர் பிரிவில் சிறந்த கல்வி நெறிமுறை கட்டமைப்புடன் கூடிய கல்வி நிறுவனங்களையும் அதில் சிறப்பாக பங்களிப்பாற்றும் கல்வியாளர்கள், பேராசிரியர்கள் என பல்வேறு பிரிவுகளின் கீழ் தேர்ந்தெடுத்து விருது வழங்கி அங்கீகரித்துள்ளது.

இதில் விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகம், புதுச்சேரி ஆறுபடைவீடு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகம், சென்னை ஆறுபடைவீடு தொழிற்நுட்ப கல்லூரி வளாகம் ஆகியவற்றில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறைக்கு "சிறந்த நிறுவனம்"என்ற விருது வழங்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டுள்து. இவ்விருதானது மருத்துவ உதவியாளர் பிரிவு பாடநெறிகள், மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ பயிற்சி மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், கூடுதல் சான்றிதழ் படிப்புகள் வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல் போன்றவற்றை மையமாகக் கொண்டும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்தகைய அங்கீகாரம் கிடைப்பதற்கு சிறந்த வழிகாட்டியாக செயல்பட்டு தனது பங்களிப்பினை ஆற்றி வரும் துறையின் டீன் பேராசிரியர் டாக்டர்.செந்தில் குமாருக்கு "சிறந்த கல்வியியல் தலைவர்" என்ற விருது வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

துறையின் டீன் வழிகாட்டுதலின்படி மருத்துவ உதவியாளர் பிரிவின் மேம்பாட் டிற்காக சிறப்பான முறையில் செயலாற்றி வரும் துறையின் மருத்துவ உதவியாளர் பிரிவு உதவி பேராசிரியர் சந்தோசுக்கு வளர்ந்து வரும் கல்வியாளர் விருதும்வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதினை பெற்றமைக்காக துறையின் டீன் மற்றும் உதவி பேராசிரியருக்கு பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர். கணேசன் மற்றும் துணை தலைவர் டாக்டர் அனுராதா கணேசன் மற்றும் துறை பேராசிரியர்கள் என அனைவரும் வாழ்த்தினையும், பாராட்டினையும் தெரிவித்தனர்.







சத்யமேவ ஜயதே

புதுச்சேரி அரசு

ஸ்மார்ட் சிட்டி

- அண்ணா திடல் ஸ்டேடியம் மற்றும் கடைகள் ரூ.12 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- புதுவை பஸ் நிலையம் மறுகட்டுமானம் ரூ.31 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- புதுவை பெரிய வாய்க்கால் புனரமைப்பு ரூ. 27 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளது.
- புதுவை சுதேசி மில் வளாகத்தில் ரூபாய் 5 கோடியில் வனப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.
- நலிவடைந்த பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டம் மூலம் சின்னையாபுரத்தில் ரூ. 23 கோடியில் 220 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குமரகுரு பள்ளத்தில் ரூ.45.50 கோடியில் 216 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.
- கலாச்சார கட்டிடங்கள் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் புதுவை பழைய துறைமுகம் வளாகத்தில் நகர பொழுதுபோக்கு மையம் அமைக்க ரூ. 5.15 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- மின்சார பேருந்து வாங்குவதற்கு ரூபாய் 25 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய கட்டிடம் கட்ட ரூ.100 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- உப்பனாறு வாய்க்கால் ரூபாய் 6 கோடியில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.
- புதுவை பீச் ரோடு கலைப்பண்பாட்டு துறைக்கு சொந்தமான கட்டிடம் மறுகட்டுமானத்திற்கு ரூபாய் 3.5 கோடி.
- புதுவை நகரப் பகுதியில் உள்ள பாதாள சாக்கடைகள் ரூபாய் 52 கோடியில் புனரமைப்பு செய்யப்படும்.
- ஸ்மார்ட் சிட்டி திட்டப்பணிகள் அனைத்தும் 2025 ஆம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்...




सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை
புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம்

பசுமை புதுச்சேரி திட்டம்




No.--------/DIP/AD(Press)/PRA/2024-25

# தேவர் குருபூஜை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று இரவு மதுரை வருகை




**மதுரை, அக். 29–**

விடுதலை போராட்ட வீரர் முத்துராமலிங்க தேவரின் குருபூஜை விழா ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 28ந்தேதி முதல் 30ந்தேதி வரை 3 நாட்கள் நடைபெறுவது வழக்கம்.

இதில் முதல் நாள் தேவரின் ஆன்மீக விழாவாகவும், இரண்டாம் நாள் அரசியல் விழாவாகவும், மூன்றாம் நாள் குருபூஜை விழாவாகவும் நடைபெற்று வருகிறது.

அதன்படி பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 117வது ஜெயந்தி மற்றும் 62வது குருபூஜை விழா நேற்று பசும்பொன்னில் தேவர் நினைவாலய பொறுப்பாளர் காந்தி மீனாள் நடராஜன் தலைமையில், பழனி, தங்கவேல் ஆகியோர் முன்னிலையில்யாக வேள்வியுடன் தொடங்கியது.

பிள்ளையார்பட்டி பிச்சை குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் லட்சார்ச்சனை, வேள்வி மற்றும் யாகசாலை பூஜைகள் நடந்தன.

முன்னதாக கமுதி பஸ் நிலைய பகுதியில் உள்ள தேவர் சிலை முன்பிருந்து ராமநாதபுரம் மாவட்ட மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் சார்பில் பொங்கல் வைத்து சிறப்பு பூஜை, வழிபாடுகள் நடந்தன. பின்னர் அங்கிருந்து ஊர்வலமாக வந்து தேவர் நினை விடத்தில் மரியாதை செலுத்தினர்.

இதேபோல் சாயல்குடி, கடலாடி, முதுகுளத்தூர், கமுதி பகுதிகளை சேர்ந்த ஏராளமான தேவரின் பக்தர்கள் மேளதாளங்களுடன் ஊர்வலமாக வந்து நினைவிடத்தில் வணங்கினர். மாலையில் நடைபெற்ற திருவிளக்கு பூஜையில் திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் ஏராளமானோர் பால்குடம், ஜோதி, முளைப்பாரி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர். 2ம் நாளான இன்று அரசியல் விழாவாக நடைபெற்றது. இதில் தேவரின் அரசியல் பயணம் குறித்து சொற்பொழிவாளர்கள் பேசுகிறார்கள்.

நிறைவு நாளான நாளை (30ந்தேதி) குருபூஜை விழாவாக நடைபெறுகிறது. இதையொட்டி அவரது நினைவிடம் அமைந்துள்ள ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொனில் அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்த இருக்கிறார்கள்.

முத்துராமலிங்கத் தேவர் குருபூஜையை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொனில் உள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து இன்று இரவு சென்னையில் இருந்து புறப்பட்டு 7 மணிக்கு மதுரை விமான நிலையம் வந்தடைகிறார். மதுரை விமான நிலையத்தில் அமைச்சர்கள், கலெக்டர், மேயர் மற்றும் நிர்வாகிகள் வரவேற்கிறார்கள்.

பின்பு புதூர் செல்லும் சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் இரவு தங்குகிறார். நாளை (30ந்தேதி) காலை அங்கிருந்து புறப்பட்டு கோரிப்பாளையத்தில் உள்ள முத்து ராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர் தெப்பக்குளத்தில் உள்ள மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

பின்பு அங்கிருந்து காரில் புறப்பட்டு காலை 10 மணிக்கு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முத்து ராமலிங்கத் தேவரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி குருபூஜையில் கலந்து கொள்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகின்றனர். இதையடுத்து மதுரை வரும் விமானம் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்புகிறார்.

இதேபோல் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ, அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சசிகலா, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன், முக்குலத் தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர், அமைப்புகளை சேர்ந்தவர்கள் தேவர் நினை விடத்தில் மரியாதை செலுத்துகிறார்கள். பாதுகாப்பு முன்னேற் பாடுகளை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளி லும், மதுரை முதல் ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை பகுதியிலும், டிரோன் கேமிரா பறக்க தடை விதித்து மதுரை, ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர்.




# சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ரூ.59.50 கோடி செலவில் புதிய மேம்பாலம்

## கவர்னர் கைலாஷ்நாதன் திறந்து வைத்தார்

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்



**புதுச்சேரி, அக். 29–**

சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ஆரியபாளையம் பகுதியில் ரூ. 59.50 கோடியில் கட்டப்பட்ட மேம்பாலத்தை கவர்னர் கைலாஷ்நாதன் திறந்து வைத்தார்.

புதுச்சேரி –விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் வில்லியனூரை அடுத்த ஆரியபாளையத்தில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே 50 ஆண்டுகளுக்கு முன்பு பாலம் கட்டப்பட்டது. கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பலத்த மழையால் பாலம் வெள்ளத்தில் மூழ்கி பெரும் சேதம் அடைந்தது.

இதனை அடுத்து ஆரியபாளையம் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே புதுவை அரசு மத்திய அரசின் நிதி உதவியுடன் புதிய பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக 365 மீட்டர் நீளமும், 18 மீட்டர் அகலத்திலும் ரூ. 59.50 கோடி மதிப்பில் 4 வழிச் சாலையாக மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுத்தது.

அதேபோல் ரூ.16 கோடியில் இந்திராகாந்தி சிலை சதுக்கம் முதல் மும்மொழி நாயக்கன் குப்பம் வரை சாலை அகலப்படுத்தும் பணியும் நடந்தது.

இந்த பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் புதிய பாலத்தின் திறப்பு விழா நேற்று ஆரியபாளையத்தில் நடந்தது. விழாவிற்கு முதலமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கினார். கவர்னர் கைலாசநாதன் கலந்து கொண்டு புதிய பாலம் மற்றும் அகலப்படுத்தப்பட்ட சாலையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார். தொடர்ந்து பாலத்தில் சிறிது தூரம் நடந்து சென்று பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், தேனீ. ஜெயக்குமார், துணை சபாநாயகர் ராஜவேலு, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா, சிவசங்கர் எம்.எல்.ஏ., பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், கண்காணிப்பு பொறியாளர் வீரசெல்வம், செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# இயற்கை உழவர்கள் சங்க ஆலோசனை கூட்டம்



**புதுச்சேரி, அக். 29–**

புதுச்சேரி பிரதேச நம்மாழ்வார் இயற்கை உழவர்கள் சங்கம், புதுச்சேரி பிரதேச நெல் ஜெயராமன் இயற்கை பல பயிர் சாகுபடியாளர்கள் சங்கம் ஒருங்கிணைந்த தலைவர் ராஜவேணுகோபால் தலைமையில் சங்க ஆலோசனை கூட்டம் பிரதேச நிர்வாகிகள், கொம்யூன் நிர்வாகிகள் மற்றும் முன்னோடி உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் புதுச்சேரி பிரதேசம் முழுவதும் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை வேளாண் பெருங்குடி மக்களுக்கு உதவிடும் வகையில் 50க்கு கீழ் உள்ள வயதினரை அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா போன்று வேளாண்மை செழிக்க உதவிடும் வகையில் சட்டமியற்றி செயல்படுத்த வேண்டி தீர்மானிக்கப்பட்டது.

தொன்று தொட்டு நீராதாரங்களை மேம்படுத்தும் பணிகளை பொ ப. து நீர்வள மேம்பாடு துறை ஆகியவற்றை கொண்டு வரத்து கால்வாய்கள் மற்றும் பாசன கால்வாய் சூன் சூலை மாதங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தி வேளாண்மை செழிக்க உறுதுணையாக இருக்கும் வகையில் வீரியமாக செயல்பட வேண்டும் என உறுதியாக தீர்மானிக்கப் பட்டது. நீண்ட கால நோக்கில் புதுச்சேரியின் ஊடே செல்லும் சங்கராப ரணி பம்பை மலட்டாறு மற்றும் தென்பெண்ணை ஆறுகளில் தொடர்ந்து அரை கிமீ தொலைவில் தடுப்பணைகளை உருவாக்க வேண்டும்.

தற்போதைய சூழலில் சாகுபடி செய்து உள்ள பயிர்கள் மழை நீர் மற்றும் பேரிடர் காலங்களில் பாதிக்காமல் இருக்க அரசு மூலம் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என தீர்மானிக்கபட்டது. நடப்பு ஆண்டு வேளாண் துறை எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்ய தரமான வித்துக்களை ஆராய்ச்சி திடல்களில் பெற்று மான்ய விலையில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும் என உறுதியாக தீர்மானிக்கப்பட்டது

நடப்பு ஆண்டு வேளாண் துறை மூலம் விவசாயிகள் பயன் பெறவும் பயறு வகைகள் உற்பத்தி அதிகரிக்கவும் வம்பன் மற்றும் இதர ஆராய்ச்சி திடல்களில் பெற்று மான்ய விலையில் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும் என உறுதியாக தீர்மானிக்கப்பட்டது நடப்பு ஆண்டு சற்று முன் கூட்டியே திட்டமிட்டு இருசங்க நாட்காட்டியுடன் உயிராற்றல் வேளாண் மைக்கு வளுசேர்க்கும் பஞ்சாங்கம் காலண்டர் உடனடியாக பிரிண்ட் செய்ய தீர்மானிக்கப்பட்டது. இதில் சங்க துணை தலைவர் ராமமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தவும், பொருளாளர் நாராயணசாமி நன்றி உரை ஆற்றவும் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.



# இந்திரா காந்தி பெலோசிப் சக்தி அபியான் திட்டம் துவக்கம்



**காரைக்கால், அக். 29–**

காரைக்கால் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில், இந்திரா காந்தி பெலோசிப் சக்தி அபியான் திட்டம் சிறப்பாக துவக்கப்பட்டது.

காரைக்காலை அடுத்த பூவம் யாதவ் நகரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, புதுச்சேரி மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆனந்த் பாபு நடராஜன் தலைமை தாங்கினார். புதுச்சேரி முன்னாள் காங்கிரஸ் கட்சி தலைவர் ஏவி சுப்பிரமணியன், மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ஆர்.பி.சந்திர மோகன், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஏ.எம்.ரஞ்சித், இந்திரா காந்தி பெலோசிப் ஒருங்கிணைப்பாளர் லோகேஷ் குமார், தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் ஜெயந்தி தியாகராஜன், இந்திரா தோழி கலைவாணி மற்றும் திரளான காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். இதுகுறித்து காரைக்கால் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஏ எம்.ரஞ்சித் கூறியதாவது:

பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும், அவர்களும் அரசியல் அங்கீகாரம் பெறவும் இந்த அமைப்பு துவங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நமது இளம் தலைவர் ராகுல் காந்தி இந்த அருமையான திட்டத்தை துவங்கி வைத்தார். பஞ்சாயத்து மற்றும் சட்டமன்றம், பாராளுமன்ற தேர்தலில் பெண்கள் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து இந்த அமைப்பில் சார்பில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் அரசியலில் முன்னேறுவதற்கான வழிவகை செய்யப்படும். இத்திட்டம் துவங்கிய நாள் முதல் ஏராளமான பெண்கள் இந்த அமைப்பில் சேர்ந்து வருகின்றனர். இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் இத்திட்டம் இந்தியாவில் மிகப்பெரிய அமைப்பாக மாறும் என்றார்.

# விஜய் கட்சியுடன் கூட்டணியா? எடப்பாடி பழனிசாமி பதில்

**சென்னை, அக். 29:**

சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் அண்ணா தொழிற்சங்க பேரவை சார்பில் 171 நலிந்த நிலை தொழிலாளர்களுக்கு ரூ.1.71 கோடிக்கான காசோலையை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வழங்கினார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையில் 9 விளையாட்டு திடல்களை தனியார்மயமாக்கும் முடிவு கண்டிக்கத்தக்கது. அரசு தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்க வேண்டும். கல்லூரிகளில் காலியாக உள்ள உதவி பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்களுக்கு முன்கூட்டியே ஊதியம் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை இருக்கும் தேர்தலுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. விஜய் தனது கருத்தை கூறியிருப்பது அவரது சுதந்திரம். தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கிறது. விஜய் கட்சியுடன் கூட்டணி குறித்து தேர்தல் நெருங்கும்போது பேசுவதுதான் சரியாக இருக்கும்.

திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு கொள்கையே கிடையாது. திமுகவுக்கும் பாஜகவுக்கும் மறைமுக ஒப்பந்தம் உள்ளதாக அனைவரும் பேசத்தொடங்கி விட்டனர். எம்.ஜி.ஆர் பெயரை சொன்னால்தான் அரசியல் செய்ய முடியும் என்ற சூழல் நிலவுகிறது என்றார்.







# ஆதரவற்ற முதியவர்களுக்கு புத்தாடை வழங்கல்



தென்காசி மாவட்டம் கடையம் வட்டார மகளிர் காங்கிரஸ் தலைவி சீதாலட்சுமி ஆதரவற்ற முதியவர்களுக்கு தீபாவளி பரிசாக புத்தாடைகளை வழங்கினார்.

# பயணிகள் நிழற்குடை அமைக்க எம்பியிடம் மனு



திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை சிறப்பு நிலை பேரூராட்சி பகுதியில் இரண்டு நியாயவிலை கடைகள் புதிதாக கட்டுவதற்கும், கரிசூழ்ந்தமங்களத்தில் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கும் பாராளுமன்ற உறுப்பினரிடம் பத்தமடை சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் ஆபிதா ஜமால்தீன் மனு அளித்தார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட அயலக அணி தலைவர் ஜமால்தீன்.

# புதுச்சேரி கடற்கரை சாலையில் பிரான்ஸ் கலை நிகழ்ச்சிகள்

**புதுச்சேரி, அக். 29–**

கடற்கரை சாலை காந்தி திடலில் பிரெஞ்சு கல்வி நிறுவனம் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.

ஸ்டெபன் ஜிரார்ட், கேமில் பியூ மியர் ஆகியோரால் உருவாக்கப்பட்ட ரோசியோ, பாலின் ப்ரீமியூவின் இசையமைப்புடன் மற்றும் அன்னே ஜொனாதனின் ஆடைகளுடன், பார்வையாளர்களை கவரும் வகையிலும், உற்சாகப்படுத்தும் வகையிலும் இந்த கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. 6 மீட்டர் உயரமுள்ள உலோக கம்பங்களில் அமர்ந்திருக்கும் கலைஞர் மற்றும் இசை கலைஞர்களின் கருவிகளை கொண்டு ரம்மியமான கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவரும்படி இருந்தது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள், பொது மக்கள் பார்த்து ரசித்தனர்.




























சத்யமேவ ஜயதே

# புதுச்சேரி அரசு

# மின்துறை




## பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சார திட்டம்

## "மின்சார பில்களில் மாபெரும் சேமிப்பு"

### திட்ட பயன்கள்

- அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களும் இத்திட்டத்தில் சேரலாம்.
  - 1 KW-க்கு ரூ.30,000 மானியம்
  - 2 KW-க்கு ரூ.60.000 மானியம்
  - 3 KW மற்றும் அதற்கு மேல் ரூ.78,000 மானியம்.
- மானியம் உங்களின் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- 1 KW மின் உற்பத்தி நிலையத்திற்கு 60 சதுரடி நிழலில்லா மேற்கூரை மட்டுமே தேவை.
- 1 KW மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வருடத்திற்கு குறைந்தபட்சம் 1500 யூனிட்கள் உற்பத்தி,
- உபரியாக உற்பத்தியாகும் யூனிட்கள் மாதாந்திர மின்சார பில்லில் ஈடு செய்யப்படும் மற்றும் வருட இறுதியில் உங்கள் வங்கிக்கணக்கில் பணமாக மின்துறையால் வரவு வைக்கப்படும்.
- குறைந்தபட்ச பராமரிப்பில் 25 ஆண்டுகால மின் உற்பத்தி உறுதி.
- பதிவு செய்தல் முதல் மானியம் பெறுதல் வரை மற்றும் அனைத்து ஒப்புதல்களும் இணையதளம் (www.pmsuryaghar.gov.in) மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- 10 KW வரை நிறுவ உடனடி அனுமதி.
- மானியம் பெற பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மூலம் மின் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டும்.
- 5 ஆண்டுகள் இலவச பராமரிப்பு உத்திரவாதம்.
- அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் (7%) உடனடி கடன் வசதி.
- செலவிடப்படும் தொகை 5 ஆண்டுகளில் சூரிய மின் உற்பத்தி மூலம் திரும்ப பெறமுடியும்.
- 6ஆம் ஆண்டு முதல் உற்பத்தியாகும் மின்சாரம் முற்றிலும் இலவசம்.






அனைத்து வீட்டு மேற்கூரையிலும் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைத்து புதுச்சேரியை பசுமை மாநிலமாக மாற்றுவோம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு ✆ 9489080373 | 9489080374 E-Mail: ee7ped@py.gov.in

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று இரவு மதுரை வருகை

# ரூ.59 ஆயிரத்தை தொட்ட தங்கம் விலை





# விஜய் கட்சியுடன் கூட்டணியா? எடப்பாடி பழனிசாமி பதில்


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 29-10-2024 செவ்வாய்க்கிழமை •வெளியூர்: 30-10-2024 புதன்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்